# தாய்ப்பாலூட்டலைச் சாத்தியமாக்குவோம்

bpni
putting child nutrition at the forefront of social change

*வேலைக்கு செல்லும் பெற்றோருக்கு மாற்றத்தினை ஏற்படுத்துவோம்*

## உலக தாய்ப்பால் வாரம் (2023) நோக்கங்கள்

- சுகாதார மையங்கள் மற்றும் பணியிடங்களில் உள்ள பெற்றோருக்கு ஆதரிப்பதற்காக இந்தியாவில் உள்ள மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை தொடங்குதல்.
- மகப்பேறு உரிமைகள் மற்றும் பிற ஆதரவு நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல்.
- வேலைக்குச் செல்லும் தாய்மார்களுக்கு உதவும் வகையில் தற்போதுள்ள மகப்பேறு நலதிட்டங்களை வலுப்படுத்துதல்.



# முன்னுரை

தாய்ப்பாலூட்டல் என்பது தாய் மற்றும் சேய் இருவரின் உரிமையாகும் எனினும், இந்தியாவில் தாய்ப்பாலூட்ட விரும்பும் தாய்மார்கள் தங்களது பணி மற்றும் தாய்ப்பாலூட்டல் இரண்டையும் சமாளிப்பது சவாலாக தென்படுகிறது. ஒவ்வொரு பெற்றோருக்கு , ஒரு பக்கத்தில் இல்லத்தரசியாகவும், மற்றொரு பக்கத்தில் பணிக்கு சென்று குடும்பதிற்காக பணம் ஈட்டுபவர்களாகவும் பல்வேறு பணியினை ஒரே சமயத்தில் செய்பவர்களாக திகழ்கின்றனர் . இவ்வாறு வேறுபட்டிருக்கும் தங்களது பங்களிப்பினை சமநிலையில் வைத்து பராமரிப்பது என்பது கடினமாகும் .மேலும் அவர்கள் வேலைக்கு செல்வதோடு மட்டுமின்றி பணியிடம் வேறுபட்டிருப்பதாலும். அது மட்டுமல்லது கூடுதலாக அவர்கள் தங்கள் வீ ட்டு வேலைகள், தண்ணீர் எடுப்பது, விறகு வெட்டுவது, சமைப்பது போன்ற வேலைகளையும் செய்து கொண்டு . தங்களது குழந்தைகளுக்குத் தாய்ப்பாலூட்டவும் கடமைபட்டிருக்கின்றனர். ஆகையால் இவ்வருடம் மகப்பேறு நலன்களை முக்கியத்துவப்படுத்துகிறோம்

இவ்வருட உலக தாய்ப்பால் வாரத்தின் கருப்பொருள் “தாய்ப்பாலூட்டலைச் சாத்தியமாக்குவோம் வேலைக்கு செல்லும் பெற்றோருக்கு மாற்றத்தினை ஏற்படுத்துவோம்” என்பதாகும். இக்கருப்பொருளின் நோக்கமானது இந்தியாவில் தாய்ப்பாலூட்டலை பாதுகாக்கும், ஊக்குவிக்கும் மற்றும் ஆதரிக்கும் அமைப்புகளை ஆராய்வது ஆகும். .இந்த ஆவணம் தாய்ப்பாலூட்டலின் கொள்கை, திட்டங்கள், நடைமுறைகள் மற்றும் நடவடிக்கை யோசனைகள் பற்றிய தகவல்களை அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் சுகாதார நிபுணர்களுக்கு தெரிவிக்கின்றது.

# பின்னணி

மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைப்பின் பரிந்துரைகள். i) குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். ii) குழந்தையின் முதல் ஆறு மாத காலத்திற்க்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். iii)குழந்தையின் இரண்டு வயது அல்லது அதற்கு மேலும் தொடர்ந்து தாய்ப்பால் கொடுக்கலாம். ஆனால் ஆறு மாதங்களுக்கு பிறகு சரியான இணை உணவுடன் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். ஏனெனில் தாய்ப்பால் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் உடல் பருமன் அல்லது உணவு சம்பந்தமான தொற்று அல்லாத நோய்களான நீரிழிவு , இருதய மற்றும் சில புற்றுநோய் போன்ற நோய்களுக்கான வாய்ப்பை குறைக்க உதவுகிறது.

போதுமான தாய்ப்பாலூட்டாததின் விளைவாக இந்தியாவில் 10,000 குழந்தைகள் வயிற்றுப்போக்கு மற்றும் நிமோனியாவினால் பாதிக்கப்பட்டு இறக்கின்றனர் என சர்வதேச ஆய்வு மதிப்பீடு செய்துள்ளது. இந்தியாவில் மட்டும் 3.47 கோடி நபர்கள் வயிற்றுப்போக்கு 0.24 கோடி நபர்கள், நிமோனியா மற்றும் 40,382 கோடி நபர்கள் உடல் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர். தாய்ப்பால் கொடுக்காதின் விளைவாக 7000 பெற்றோருக்கு மார்பக புற்றுநோய் , 1700 பெற்றோருக்கு கருப்பை புற்றுநோய் மற்றும் 87000 பேர் நீரிழிவு (type2) நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் இந்த நோய் பாதிப்புகளின் மருத்துவ பராமரிப்பிற்காக ரூபாய் 875.84 கோடி செலவு செய்யபடுகிறது.

தாய்ப்பாலுக்கு ஈடு இணையற்ற மதிப்பு இருந்த போதிலும் இந்தியாவில் தாய்ப்பாலூட்டுதலின் விகிதம் மிக குறைவு. தேசிய குடும்ப மற்றும் சுகாதார கணக்குகளின் (2019-21) படி சுமார் 90% பெற்றோருக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பிரசவிக்கின்றனர் இதில் 41.8% பேர் மட்டுமே பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுக்கத் தொடங்குகின்றனர். ஆனால் பிறந்த முதல் ஆறு மாதத்தில் 63.7% குழந்தைகள் தாய்ப்பால் மட்டுமே எடுத்து கொள்கின்றனர். இந்த சதவிகித உயர்வு ஊக்கமளிக்கிறது. ஆனால் 6 முதல் 8 மாதங்களுக்கு இடையில் சுமார் 45.9% குழந்தைகள் மட்டுமே தாய்ப்பாலுடன் கூடிய இணை உணவுகளைத் தொடங்குகின்றனர்.

## போதுமான தாய்ப்பால் கொடுக்காததால் ஏற்படக்கூடிய விளைவுகள்

**தடுக்ககூடிய குழந்தை இறப்புகள்**

100,000

**வயிற்றுப்போக்கு**

34,791,524

**நிமோனியா**

2,470,429

**உடல்பருமன்**

40,382



**மார்பக புற்றுநோய்**

7,976

**சினைப்பை புற்றுநோய்**

1,748

**நீரிழிவு நோய் (டைப் - 2)**

87,855

**சுகாதார பராமரிப்பு செலவு**

INR 875.84 கோடி

Source: https://www.aliveandthrive.org/en/country-stat/india

# தாய்ப்பாலுக்கான ஆதரவு, கொள்கை மற்றும் திட்டங்களின் இந்தியாவின் நிலை


## இந்தியாவின் கொள்கை மற்றும் திட்டங்கள்

உலக தாய்ப்பால் போக்குகளின் படி இந்தியாவின் 2018 ஆம் ஆண்டின் சிறு குழந்தைகளுக்கு உணவளிப்பது பற்றிய கொள்கை மற்றும் திட்டங்களின் அறிக்கையில் இந்தியா 100க்கு 45 சதவிகிதம் அடைவைப் பெற்றுள்ளது. எனினும் தேசிய கொள்கை மற்றும் ஒருங்கிணைப்பு.மகப்பேறு பாதுகாப்பு மற்றும் அவசரநிலைகளில் குழந்தைக்கு உணவளித்தல். தாய்ப்பாலுக்கு பதிலான உணவுகளுக்கு ஏதிரான சட்டத்தை நடைமுறைப் படுத்தல் துறைகளில் போன்ற முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் உள்ளது. தாய்ப்பால் கொள்கை மற்றும் ஆதரவு குறித்து பகுப்பாய்வு போதுமான முதலீடு இல்லாததால் ஒட்டுமொத்த, ஆய்வு செய்யப்பட்ட 98 நாடுகளில் இந்தியா 79வது இடத்தில் உள்ளது.

**Fig. 1: The State of Infant and Young Child Feeding (IYCF)**

Policies and Programmes (Indicator 1-10)

*[score out of 10]*




Total Score (Policy and Programmes) : 45/100

*Source: WBT India Report 2018*

## மகப்பேறு பாதுகாப்பு

**மகப்பேறு நன்மை (திருத்தம்) சட்டம் 2017 (MB சட்டம்)**




மகப்பேறு நன்மை சட்டத்தின் படி முறையான துறையில் பணிபுரியும் பெற்றோருக்கு மகப்பேறு சலுகைகள் கிடைக்கும். இவை முக்கியமானவை மற்றும் ஒவ்வொரு குடிமகனும் தெரிந்துகொள்ள வேண்டும்

- இச்சட்டம் இந்தியா முழுமைக்கும் பொருந்தும்.
- 26 வாரங்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு.
- இது 10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பணிபுரியக்கூடிய அனைத்து சுரங்கங்கள், தோட்டங்கள் கடைகள் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அமைப்பு மற்றும் அமைப்புசாராத் துறையில் முந்தைய பன்னிரெண்டு மாதங்களில் எந்த நாளில் பணியமர்த்தபட்ட நபர்களுக்கும் பொருந்தும்
- ஸ்தாபனத்தில் 80 நாட்களுக்கு மேல் பணிபுரிந்த எந்தவொரு பெற்றோருக்கு மகப்பேறு நன்மைகளுக்கு உரிமையுண்டு
- நேரடியாகவோ அல்லது ஏதேனும் ஏஜென்சி மூலமாகவோ அதாவது ஒப்பந்த அடிப்படையில் அல்லது ஆலோசகராகப் பணிபுரியும் அனைத்துப் பெற்றோருக்கு 50அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட ஒவ்வொரு நிறுவனமும் குறிப்பிட்ட தூரத்திற்குள் குழந்தை பராமரிப்பு வசதிகளை வழங்க வேண்டும்.

**மகப்பேறு நன்மை சட்டம் 2017 ஐ மீறுவதற்கான அபராதங்கள்**

பணியமர்த்துபவர் இந்தச் சட்டத்தின் கீழ் உரிமையுள்ள ஒரு பெற்றோருக்கு மகப்பேறு பலனைச் கொடுக்க தவறினால் அல்லது அந்தப் பெற்றோரை கர்ப்ப காலத்தில் வெளியேற்றினால் அல்லது பணிநீக்கம் செய்தால், 3 மாதங்களுக்கு குறையாத சிறைத்தண்டனை மற்றும் ஒரு வருடம் வரை ரூ. 2000/- முதல் 6000/- வரை அபராதமும் வழங்கப்படும். இதுபோன்ற வழக்குகளில் பெற்றோருக்கு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இன்ஸ்பெக்டரிடம் புகார் செய்யலாம்.

**எங்கே புகார் செய்வது?**

இந்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், மகப்பேறு பலன்களை கொடுக்காத குறைகளை எழுப்பும் டிஜிட்டல் முயற்சியான சமதன் (SAMADHAN)போர்ட்டலை வழங்குகிறது. குறைகளை samadhan.labour.gov.in என்ற இணையதளத்தில்பதிவு செய்யலாம்.

- ஒருநாளில் குழந்தை பராமரிப்பு மையத்திற்குள் ஒரு பெற்றோரை நான்கு முறை செல்ல அனுமதிக்கப்படுவார். அவளுக்கு அனுமதிக்கப்பட் ஓய்வு இடைவெளியும் இதில் அடங்கும்.
- மகப்பேறு விடுப்புக் காலத்திற்குப் பிறகு, குறிப்பிட்ட காலத்திற்கு வீட்டிலிருந்து வேலை செய்ய பணியாளர் பணியமர்துபவர் பரஸ்பரம் தீர்மானிக்கலாம்

**அமைப்புசாரா துறையில் உள்ள பெற்றோருக்கு பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜ்னா (PMMVY)**

பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜ்னா (PMMVY), அமைப்புசாரா துறையில் பணிபுரியும் பெற்றோருக்கு மற்றும் இல்லத்தரசிகளுக்கும் பொருந்தும். அமைப்பு மற்றும் அமைப்பு சாரா துறைகளில் பெற்றோருக்கு நிதிப்பலன்களை பெறுவதில் பாகுபாடு பல நிபந்தனைகள் உள்ளன. PMMVY இன் கீழ், ரொக்க ஊக்கத் தொகையாக ரூ. 5000/ நேரடியாக (3 தவணைகளில்) கர்ப்பிணிப் பெற்றோருக்கு மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் (PW&LM) வங்கிக் கணக்கிற்கு (PW&LM) இதனைப் பெற வரவுவைக்கப்படுகிறது தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியம் தொடர்பான குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் குடும்பதார்கள் இதனை பெறலாம்

**உண்மைகள்:**

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், இந்திய அரசின் கணக்கெடுப்பின்படி ஜூலை 2021-ஜூன் 2022 இந்தியா முழுவதிலும் 32.8% பெற்றோருக்கு (15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்) மட்டுமே தொழிலாளர்களாக உள்ளனர்.
- மகப்பேறு நன்மை சட்டம் முறைசார்ந்த துறையில் உள்ள ஒரு சிறிய சதவீத பெற்றோருக்கு தொழிலாளர்களுக்கு மட்டுமே பொருந்தும்
- 2019-20 ஆம் ஆண்டில் PMMVY பிறப்புகளில் முதல் குழந்தைகளுக்கு 48% மற்றும்எல்லா குழந்தை பிறப்புகளுக்கும் 24% மட்டுமே உள்ளடக்கியது.

# சவால்கள்

எல்லாப் பெற்றோரும் வீட்டிலோ அல்லது வெளியில் இருந்தோ வேலை செய்கிறார்கள்.வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் பிரத்தியேகமான தாய்ப்பாலைத் தொடங்குவதற்கும், முதல் 2 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொடர்ந்து தாய்ப்பால் கொடுப்பதற்கும் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

- கர்ப்ப காலத்தின் போதும், குழந்தை பிறப்பின் போதும் போதுமான ஆதரவு இன்மை.
- தற்போதுள்ள மகப்பேறு உரிமைகள் குறித்த விழிப்புணர்வு இன்மை.
- சமூக ஊடகங்கள் மூலம் குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் உணவுகள் தவறான முறையில் அறிவுறுத்த படுகின்றன.
- வேலை செய்யும் இடங்களில், குறிப்பாக முறைசாரா துறையில் பாகுபாடு பார்க்கப்படுகிறது.
- குழந்தை பராமரிப்பு மையங்கள், தனியார் மற்றும் சுகாதாரமான தாய்ப்பாலூட்டும் இடங்கள் இல்லாதது.
- குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து ஆதரவு இல்லாதது.
- பொது இடங்களில் தாய்ப்பால் கொடுப்பது தொடர்பான சமூக இழிவு நிலைமை தாய்ப்பால் கொடுப்பதை மேலும் சிக்கலாக்குகிறது.

## சாட்சியங்கள்




ஜூலை 2016 இல் நான் கர்ப்பமாக இருக்கிறேன் என்பதை அறிந்தபோது, குழந்தைபராமரிப்பு பற்றி நான் ஒருபோதும் சிந்திக்கவில்லை என்பதை உணர்ந்தேன். 2016 ஆகஸ்டில், மகப்பேறு மசோதா ராஜ்யசபாவில் முதன்முதலில் நிறைவேற்றப்பட்டது.அப்போதுதான் இந்த மசோதாவை சட்டமாக்க ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவு செய்தேன்.காலம் தாழ்த்தாமல், மகப்பேறு மசோதாவை அரசு நிறைவேற்றி சட்டமாக்க வேண்டும் என்று கோரிக்கை மனுவைத் தொடங்கினேன். நான் பணிபுரியும் நிறுவனம் உட்பட பெரும்பாலான கார்ப்பரேட் நிறுவனங்கள் எந்த தாய்க்கும் 6 மாத ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பை வழங்காது என்பதை உணர்ந்ததால் இதைச் செய்தேன். மனுவிற்கான பிரச்சாரம் எளிதாக வரவில்லை. அம்மாவின் தேவை குறித்து மக்கள் இன்னும் உணரவில்லை. பிரசவத்திற்குப் பிறகு தனது குழந்தையை ஆரோக்கியமாக மீட்டெடுக்கவும், கவனித்துக்கொள்ளவும். பல மாத போராட்டத்துக்குப் பிறகு, மசோதா நிறைவேற்றப்பட்டு, மகப்பேறு மசோதா சட்டமாக மாறியது. இந்தப் புதிய சட்டத்தால் பயனடைந்த பல தாய்மார்களைப் போலவே நானும் எனது குழந்தைக்கு 5 வயது வரை தாய்ப்பால் கொடுக்க முடிந்தது. நான் 6 மாத மகப்பேறு விடுப்பு பெற முடியாவிட்டால் இது சாத்தியமில்லை. ஒரு தாய் இந்த நிலைக்குத் தகவமைத்துக் கொள்ள நேரம் எடுக்கும் என்பதை மக்கள் உணரவில்லை. தாய்மை என்பது ஒரு அழகான கட்டம், அது அதன் சொந்த சவால்களுடன் வருகிறது, மேலும் மனஅழுத்தம் இல்லாத 6 மாத ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பை வழங்குவது ஒரு தாய்மற்றும் அவரது குழந்தைக்கு ஆரோக்கியமான தொடக்கத்தை வழங்குவதற்கு நாம் செய்யக்கூடிய குறைந்தபட்சம் என்பதை அதிகமான மக்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

ஜின்சி வர்கீஸ், வயது 36, மும்பை

---




தாய்மை என்பது ஒரு சவாலான பணி, குறிப்பாக வேலை செய்யும் தாய்மார்களுக்கு. நான் புதுதில்லி இந்திராகாந்தி தேசிய திறந்த வெளி பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிகிறேன். நான் கர்ப்பத்தின்ஏழாவது மாதத்தில், அக்டோபர் 2021 இல் IGNOU இல் சேர்ந்தேன், அதன் பிறகு டிசம்பர் 2021இல், எனக்கு மகள் பிறந்தாள். நான் டிசம்பர் 2021 முதல் ஜூன் 2022 வரை மகப்பேறு விடுப்பில் சென்றேன். ஜூன் 2022 இல் மகப்பேறு விடுப்புக்குப் பிறகு நான் திரும்பி வர வேண்டியிருந்தது. நான் புதியவேலையில் இருந்ததால், சம்பாதித்த விடுப்பு அல்லது குழந்தை பராமரிப்பு விடுப்பு போன்ற வேறு எந்த விடுமுறையையும் என்னால் பெற முடியவில்லை, மேலும் ஆறு மாத குழந்தையை வீட்டில் ஒரு பராமரிப்பாளரால் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. எனது குழந்தைக்கு பிரத்தியேகமாக தாய்ப்பால் கொடுக்கவும், முழு ஊதியத்துடன் 24*7அவளுடன் இருக்கவும் இந்த நேரத்தை வழங்கியதற்காக அரசாங்கத்தின் ஆதரவிற்கு நான் நன்றி உள்ளவளாக இருந்தாலும், குழந்தைக்கு 10 மாதங்கள் ஆகும் வரை மகப்பேறு விடுப்பை நீட்டிக்க அல்லது அலுவலக நேரத்தில் தாய்ப்பால் வழங்குவதற்கு வேலை நேரத்தில்வாய்ப்பளிக்க விரும்புகிறேன்.எனது தொழில் வாழ்க்கையில் மகப்பேறு விடுப்பின் பலன்கள் இருந்த போதிலும், வீட்டிற்கு வெளியே உள்ள சூழலில் குழந்தை பழக உதவும் வகையில் மகப்பேறு விடுமுறையை 9-10 மாதங்களாக அதிகரிக்க வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். மேலும், இந்தியாவில்தாய்ப்பால் கொடுப்பதை ஊக்குவிக்கும் வகையில் பணியிடங்களில் தாய்ப்பால் கொடுப்பதற்கு ஏற்ற பணிச் சூழலைக் காண விரும்புகிறேன்.

டாக்டர் அங்கிதா குப்தா, வயது 36, புது தில்லி

# பிற கொள்கை விதிகள்

இந்தியாவில், சுற்று சூழலை செயல்படுத்தும் கொள்கை மற்றும் விதிகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.




**தாய்ப்பால் மாற்று, பால் புட்டிகள் மற்றும் குழந்தைகளுக்கான உணவுகள் (உற்பத்திவிதிமுறைகள் மற்றும் விநியோகம்) சட்டம் 1992 மற்றும் திருத்தச் சட்டம் 2003:** இந்த சட்டம் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உணவு மற்றும் பால் புட்டிகளில் உணவு அருந்துதல்,சுகாதார ஊழியர்கள் அல்லது அவர்களது சங்கத்தின் நிதியுதவி, பெற்றோருக்கு பரிசுகள் வழங்குதல், ஊழியர்களுக்கு கமிஷன் வழங்குதல், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுடன் புகைப்படம் எடுப்பது அல்லது வரைகலைகள் பயன்படுத்துவது போன்றவற்றை தடை செய்கிறது.






**தேசிய உணவு பாதுகாப்பு சட்டம், 2013:** இந்த சட்டம் உணவு மற்றும் தாய்ப்பால் வழங்கும் உரிமையை அங்கீகரிக்கிறது: இது பின்வருவனவற்றை வழங்குகிறது

- கர்ப்ப காலம் மற்றும் குழந்தை பிறந்த ஆறு மாதங்கள் வரை இலவச உணவு.
- மகப்பேறு சலுகைகள் ஆறாயிரம் ரூபாய்க்கு குறையாமல் மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட தவணை முறையில் அளித்தல்
- ஆறு மாதம் முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு, வயதுக்கு ஏற்ற உணவு, இலவசமாக வழங்கப்படுதல்.
- ஆறு மாதங்களுக்கு கீழ், பிரத்தியேக தாய்ப்பால் மட்டுமே உணவாக கொடுக்க ஊக்குவிக்கப்பட வேண்டும்.


தாய்ப்பாலூட்டுதல் மற்றும் இளம் குழந்தைகளுக்கான உணவு முறைகளை ஊக்குவிப்பதற்காக.இந்திய அரசாங்கம் அவ்வப்போது வழிகாட்டுதல்களை வெளியிட்டு வருகிறது.

- கைகுழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கு உணவளிப்பதற்கான தேசிய வழிகாட்டுதல்கள் (2006) உணவளிக்க வேண்டிய வழிகாட்டுதல்களை பரிந்துரைக்கிறது
- தாய்ப்பால் கொடுப்பதை மேம்படுத்துவதற்கான தேசிய வழிகாட்டுதல்கள் (MoHFW,2013) சுகாதார அமைப்புக்கள் கவனம் செலுத்துகிறது.
- தாய்மார்களின் முழுமையான பாசம் திட்டம் (Mother's Absolute Affection) (MoHFW, 2016): மருத்துவமனைகளில் தாய்ப்பால் கொடுக்கும் நடை முறைகளை ஊக்குவிப்பதை தனது முதன்மை நோக்கமாக கொண்டுள்ளது.
- தாய்ப்பால் ஊட்டுதல் மேலாண்மை மையங்களுக்கான தேசிய வழிகாட்டுதல்கள் (LMCs,2017), தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்களுக்கு உதவும் பணியாளர்களுக்கு மற்றும் தாய்ப்பால் வங்கிகளுக்கு வழிகாட்டுதலை கொடுக்கிறது.










# செயல்படுத்த வேண்டிய நடவடிக்கைகள்

பின்வரும் ஐந்து முறைகள் மூலம் பெண்களுக்கு அதிகமாக ஆதரவு அளிக்கலாம்.

**1.தாய்ப்பால் கொடுக்கும் நடைமுறைகளை திறம்பட செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்**
தாய்மார்களின் முழுமையான பாசம் திட்டம் என்ற திட்டத்தில் பின்வரும் நடவடிக்கைகள் மிகவும் அவசியமானவை.

- மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு தாய்ப் பாலூட்டும் திறனை அதிகரிக்க ஆதரவு தருவதற்கு பயிற்சிகளை அளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு மகப்பேறு மருத்துவமனையும் அதன் தாய்ப்பாலூட்டும் குறிகாட்டிகளை அளந்து கண்காணிக்கிறது என்பதை உறுதிசெய்ய வேண்டும்.
- மருத்துவம் மற்றும் செவிலியர் கல்லூரி பாடத்திட்டத்தில் தாய்ப்பால் கல்வியை வலுப்படுத்துதல்.
- தனியார் மருத்துவமனைகளையும் உட்படுத்த வேண்டும்.

2.இந்தியாவின் தாய்ப்பால் ஊக்குவிப்பு நெட்வொர்க் (BPNI) மற்றும் சுகாதார பாதுகாப்பு சங்கங்களுடன் இணைந்து தாய்ப்பால் கொடுப்பதற்கு ஏற்ற மருத்துவமனையாக அங்கீகரிக்க பட வேண்டும். இந்தியாவில் உள்ள தனியார் மற்றும் அனைத்து மகப்பேறு மருத்துவமனைகளுக்கும் குறிப்பாக தனியார் துறைக்கும் ஒரு தனித்துவமான ஆக்கிரமிப்பு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. WHO-ன்10வழி முறைகளின் அடிப்படையில், வெற்றிகரமாக தாய்ப்பால் கொடுப்பதற்கு அனைத்து மகப்பேறு மருத்துவமனைகளும் தாய்ப்பால் கொடுக்கும் நல்ல நடைமுறைகளை பயிற்சி கொடுக்க வேண்டும்.

3. மகப்பேறு நன்மை சட்டத்திற்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்க வேண்டும்.இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள உரிமைகள்குறித்து பெற்றோர்களுக்கு ஊடகங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், இவற்றைப் பெறாதவர்கள் புகார் செய்யலாம்.

4. தாய்ப்பால் கொடுக்கும் முறையை அனுமதிக்கும் பணியிடங்கள்: பணியாளர்கள் பணியிடங்களுக்குள் தாய்ப்பால் ஊட்டும் சூழலை உருவாக்க வேண்டும். அவைகள் பின்வருமாறு

- ஊதியத்துடன் மகப்பேறு விடுப்பு
- தனிப்பட்ட, சுத்தமான வசதியுடன் கூடிய தாய்ப்பால் கொடுக்கும் அறைகளை அமைத்து தருதல்
- தாய்பாலூட்ட இடைவேளை இது தாயின் பால் சுரப்பதை பராமரிக்க அனுமதிக்கிறது.
- குழந்தைகளை பேணி வளர்க்கும் பகல் நேர பராமரிப்பு மையம் அமைத்துத் தருதல்.

5. குறிப்பாக சுகாதார அமைப்புகளில் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு மூலம் IMS சட்டத்தை கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும்.



# செயல் படுத்த கூடிய யோசனைகள்



## அரசு

- மகப்பேறு நன்மை சட்டம் மற்றும் IMS சட்டத்திற்கான சட்ட விதிகளை திறம்பட கண்காணித்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தாய்மார்களின் முழுமையான பாசம் திட்ட செயல்பாட்டை மற்றும் அதன் கண்காணிப்பை வலுப்படுத்துதல் வேண்டும்

## மக்கள்அமைப்புகள்

- உங்கள் பகுதியில் மகப்பேறு உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்து தர வேண்டும்.
- உங்கள் பகுதிக்கு அருகிலுள்ள குறைந்தபட்சம் ஒரு மகப்பேறு மருத்துவமனைக்காவது தாய்ப்பால் கொடுப்பதற்கு ஏற்ற மருத்துவமனை என்ற அங்கீகரத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.

சாட்சியங்கள் மற்றும் அனுபவத்தைப் பகிரவும் / இடுகையிடவும் இந்தியாவில் உங்கள் பணியிடத்தில் மகப்பேறு உரிமைகள் சமூக வலைத்தளங்களில் @bpniindia டேக் செய்து #EnablingBreastfeeding

## சுகாதார தொழில்முறை சங்கங்கள்

- உங்கள் உறுப்பினர்களுக்கு மகப்பேறு நன்மை சட்டம் மற்றும் IMS சட்டத்தின் விதிகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுங்கள்.

Report your activities during the WBW 2023 to BPNI to become eligible for the World Breastfeeding Week Awards and for wider dissemination of your work.
Send your WBW celebration reports to us at ***bpni.india2022@gmail.com***

Download resources from https://www.bpni.org/world-breastfeeding-week-2023/




***References***

1. The Infant Milk Substitutes, Feeding Bottles and Infant Foods (Regulation of Production, Supply and Distribution) Act, 1992 and Amendment Act 2003. https://www.indiacode.nic.in/handle/123456789/1958?sam_handle=123456789/1362
2. The Maternity Benefit (Amendment) Act, 2017 https://labour.gov.in/sites/default/files/maternity_benefit_amendment_act2017_.pdf
3. Maternity Benefits, Ministry of Labour & Employment. https://www.esic.gov.in/maternity-benefits
4. Press Note on Periodic Labour Force Survey (PLFS) Annual Report [July 2021 – June 2022]. https://www.mospi.gov.in/sites/default/files/press_release/Press_note_AR_PLFS_2021_22_24022023.pdf
5. BPNI World Breastfeeding Week Action Folder 2015. http://www.old.bpni.org/WBW/2015/action-folder-WBW2015-english.pdf
6. National Food Security Act, 2013. https://nfsa.gov.in/portal/nfsa-act

7.Jean Dreze, Reetika Khera, Anmol Somanchi (2021). Maternity Entitlements in India: Women's Rights Derailed. https://osf.io/preprints/socarxiv/v5mc6/download

8. Pradhan Mantri Matru Vandana Yojna (PMMVY). https://pmmvy.nic.in/

bpni putting child nutrition at the forefront of social change
IBFAN defending breastfeeding

Breastfeeding Promotion Network of India (BPNI)

Address: BP-33, Pitampura, Delhi 110 034. Tel: +91-11- 42683059

bpni@bpni.org http://www.bpni.org

@bpniindia @bpni.org

https://www.youtube.com/user/bpniindia

idecide4me

ABOUT BPNI

The Breastfeeding Promotion Network of India (BPNI) is a 31 years old registered, independent, non-profit, national organisation that works towards protecting, promoting and supporting breastfeeding and appropriate complementary feeding of infants and young children. BPNI works through policy analysis, advocacy, social mobilization, information sharing, education, research, training and monitoring the company compliance with the IMS Act. BPNI serves as the global secretariat for World Breastfeeding Trends Initiative (WBTi) programme, that analyses policy & programmes and galvanises action at country level in different regions of the world. BPNI is part of the International Baby Food Action Network (IBFAN)

BPNI's ETHICAL POLICY

BPNI does not accept funds or any support from the companies manufacturing baby foods, feeding bottles or infant feeding related equipments. BPNI does not associate with organizations having conflicts of Interest. BPNI request everyone to follow this ethical stance while celebrating World Breastfeeding Week.

Written and edited by: Nupur Bidla
Reviewed by : Dr. Arun Gupta
Designed by : Amit Dahiya
Tamil translated by : Prof. Dr. A. Jayasudha, Priya.V, Maheshwari.B, Kavipriya.N, Priya.M, PSG College of Nursing, Coimbatore, Tamil Nadu